Name of the Newspaper: Hindu Tamil Date: 15.5.18

ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஆய்வு

# சென்ட்ரல்-நேரு பூங்கா இடையே மெட்ரோ ரயில் சோதனை

## ● விமான நிலையத்துக்கு விரைவில் நேரடி சேவை



▲ சென்னை சென்ட்ரல் – நேரு பூங்கா இடையே நடைபெறும் மெட்ரோ ரயில் ஆய்வு குறித்து செய்தியாளர்களிடம் பேசுகிறார் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் (தெற்கு) ஏ.கே.மனோகரன். படம்: க.ஸ்ரீபரத்




▲ மெட்ரோ ரயில் பாதையில் டிராலி மூலம் ஆய்வு மேற்கொண்ட ரயில்வே பாதுகாப்பு ஆணையர் தலைமையிலான குழு.

■ சென்னை

சென்னையில் அடுத்த கட்டமாக சென்ட்ரல் – நேரு பூங்கா மெட்ரோ ரயில் பாதையில் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் மனோகரன் டிராலி மூலம் ஆய்வு பணியை நேற்று தொடங்கினார். நள்ளிரவில் 80 கிமீ வேகத்தில் மெட்ரோ ரயில் இயக்கி சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சென்னையில் 2 வழித்தடங்களில் மொத்தம் 45 கிமீ தூரத்துக்கு மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில், 24 கிமீ தூரத்துக்கு (19 ரயில் நிலையங்கள்) சுரங்க வழிப் பாதை வழியாக இயக்கப்படவுள்ளது. இதுவரையில் 28 கிமீ தூரம் பணிகள் முடிந்து சேவை தொடங்கப்பட்டுள்ளது. இறுதியாக திருமங்கலத்தில் இருந்து நேரு பூங்காவுக்கு சுரங்கப்பாதையில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டது.

அடுத்தகட்டமாக நேரு பூங்கா, எழும்பூர், சென்ட்ரல் (2.7 கிமீ) மெட்ரோ ரயில் பாதை மற்றும் ரயில் நிலையங்கள் பணிகள் நிறைவடைந்து, கடந்த 2 மாதங்களாக சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதேபோல், சின்னமலை - டிஎம்எஸ் (4.5 கிமீ) வழித்தடத்திலும் சோதனை ஓட்டம் நடத்தப்படுகிறது.

இந்நிலையில், இந்த 2 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் இயக்கம் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு நடத்திட ரயில்வே பாதுகாப்பு ஆணையர் (தெற்கு) ஏ.கே.மனோகரன் தலைமையிலான 6 பேர் கொண்ட குழுவினர் நேற்று சென்னை வந்தனர்.

ஆய்வு பணிகளைத் தொடங்குவதற்கு முன்பு ஏ.கே.மனோகரன் நிருபர்களிடம் கூறியதாவது:

நேரு பூங்கா – சென்ட்ரல் மெட்ரோ வழித்தடத்தில் ரயில்கள் இயக்கம், சுரங்கப் பாதையில் அமைக்கப்பட்டுள்ள பயணிகளுக்கான பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு நடத்துவோம். முதல் கட்டமாக மெட்ரோ ரயில் பாதையில் டிராலி மூலம் ஆய்வு நடத்துவோம். நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 4 மணி வரையில் மெட்ரோ ரயிலை 80 கிமீ வேகத்தில் இயக்கி ஆய்வு செய்வோம்.

அடுத்தகட்டமாக வரும் 18, 19 ஆகிய தேதிகளில் சின்னமலை - டிஎம்எஸ் இடையே பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வோம். மெட்ரோ ரயில் சேவை தொடங்குவதற்கான தேதியை மெட்ரோ ரயில் நிர்வாகம் தமிழக அரசுடன் ஆலோசனை நடத்தி பிறகு அறிவிக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த சந்திப்பின்போது, மெட்ரோ ரயில் நிறுவன நிர்வாக இயக்குநர் பங்கஜ்குமார் பன்சால், பொதுமேலாளர் (சுரங்கம்) வி.கே.சிங், திட்ட இயக்குநர் திரிவேதி ஆகியோர் உடனிருந்தனர்.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகளிடம் கேட்ட போது, "கட்டுமானப் பணிகளின் முறைகள், சிக்னல்கள் செயல்பாடு, ரயில் பாதையின் திறன், ரயில் நிலையங்களில் பாதுகாப்பு அம்சங்கள், சோதனை ஓட்டத்தின் செயல்பாடுகள் குறித்து நாங்கள் முழுமையாக ஆய்வின் போது விவரிப்போம். ஆய்வில் முழு திருப்தி ஏற்பட்ட பிறகு ஒப்புதல் கிடைக்கும்.

இதனால், சென்ட்ரலில் இருந்து விமான நிலையத்துக்கு இம்மாதம் இறுதிக்குள் நேரடியாக மெட்ரோ ரயில் சேவை தொடங்கும் என எதிர்பார்க்கிறோம்" என்றனர்.